சிறப்பு மாவட்ட நீதிமன்றம், ஈரோடு
(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்)
வழக்கு எண். MCOP. No. 126/2024

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் தேதி ம.சா.2 வாக்குமூலம் உறுதிமொழிச்சட்டம் 44/1969 பிரிவு 4 ஏற்பாட்டின் படி திரு. S. சக்திவேல், முதல்நிலை உதவியாளர், சிறப்பு மாவட்ட நீதிமன்றம், ஈரோடு என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரவீன் | கிராமம் | : |
| த/பெ | : | மாவட்டம் | : |
| வயது | : | தொழில் | : |

முதல் விசாரணை :

நான் மனுதாரர் தரப்பு சாட்சி. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தைத் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை நான் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதை என்னுடைய சாட்சியத்தின் ஒரு அங்கமாகப் பாவிக்க வேண்டுகிறேன். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் ம.த.சா.ஆ.9.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

சம்பவ ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். மோட்டார் சைக்கிள் அந்த ரோட்டில் தெற்கே இருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடதுபுறமாக போய்க் கொண்டிருந்தது என்றால்

சரிதான். இறந்து போன நபர் கிழக்கேயிருந்து மேற்கு நோக்கி வந்தார். கிழக்கேயிருந்து மேற்கு வரும் போது இடதுபுறமாக பார்க்க அந்த ரோட்டில் எவ்வித இடையூறும் இல்லை என்றால் சரிதான். சம்பவ விபத்து தெற்கிலிருந்து வடக்காக மோட்டார் சைக்கிள் சென்ற போது அந்த நபர் கிழக்கே இருந்து மேற்கு நோக்கி வந்துவிட்டதால் நடந்தது என்றால் சரியல்ல. ரோட்டை இறந்து போனவர் தான் குறுக்காக கடக்கிறார் என்றால் சரிதான். விபத்திற்கு அவர் தான் காரணம் என்றும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மீது தவறில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>:

இல்லை.